**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் றொம்மன்**

**ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, ROMMEN**

**ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, ROMMEN**

பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்! கிழமை இல. 39- 2025 .

வணக்கம் அன்பார்ந்த பெற்றோர்களே!

• தியாகதீபம் திலீபனின் நினைவுநாள் 26,27.09.25 ம் திகதிகளில் பாடசாலையில் வகுப்பு நேரத்தில் நினைவுகூரப்படும்.

• நவராத்திரிவிழா 02.10.25 வியாழக்கிழமை 17:30 மணிக்கு தமிழில் பூசை வழிபாட்டுடன் 3ம்மாடி மண்டபத்தில் நடைபெறும்.பூசை முடிவடைந்ததும் ஏடுதொடக்கலும், கலைப்பாடங்களுக்கான வித்தியாரம்பமும், கலைப்பாட மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறும்.

தேசியஅறிவாடல்போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான அறிவாடல்போட்டி 3-10ம் வகுப்பு மாணவர்களுக்கு எமது வளாகத்தில் 26.10.25ம் திகதி நடைபெறும்.

• மழலையர் முற்றம் நிகழ்வு 11.10.25 சனிக்கிழமை 13.00 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வில் 2020,2021,2022 பிறந்த மழலையர் அனைவரும் இணைந்து கொள்ளலாம். தங்கள் பதிவை மேற்கொள்ளவும்

https://forms.office.com/e/6V9vJVRX4F




• திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி எமது வளாகத்தில் இவ்வாண்டு ஐப்பசி மாதம் 19ம்திகதி நடைபெறும். அன்னைமுற்ற திருக்குறள்போட்டி 25,26.10.25ம் திகதிகளில் நடைபெறும்.

**நிதி:**

எம்மால் வழங்கப்பட்ட தவணைக்கட்டணங்களை (2023, 2024, 2025 ஆண்டுக்குரிய) இதுவரை செலுத்தாதவர்கள் உடனடியாக 30.09.2025ம் திகதிக்கிடையில் செலுத்தவும். சிலர் இன்னமும் 2,3 தவணைக்குரிய கட்டணங்களை செலுத்தாமல் உள்ளார்கள்.

**குறிப்பு:**

1அங்கத்துவ கட்டணம் ,தவணைக்கட்டணம் முழுமையாகச் செலுத்தியவர்கள், (30.09.25ம் திகதிக்கு முன்னர் செலுத்தியிருத்தல் வேண்டும்.)

2 வளாகச் செயற்பாடுகளில் தொடர்சியாக பங்கொள்பவர்களே

முழுமையான அங்கத்துவத்துவ உரிமையினை உறுதிப்படுத்தியவர்கள் என்பதனை அறியத்தருகின்றோம்.

**ஆண்டுக்கூட்டம்:**

ஆண்டுக்கூட்டத்தினை நடாத்துவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 26.10.2025 அல்லது 08,09.11.2025. கூட்டம் நடைபெறும்.

பெற்றோர் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் இணைந்து கலந்துரையாடப்பட்டது. பெற்றோர் பிரதிநிதிகளால் தரப்பட்ட ஆலோசனைகளுக்கு ஏற்ப ஆண்டுக்கூட்ட நடைமுறை விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. காவல் பணிக் கூட்ட நடத்துனர் தொடர்பான விடயங்கள் உறுதிப்படுத்தும் முயற்சி நடைபெற்று வருகிறது.

ஆண்டுக்கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்களை றொம்மன் நிருவாகத்தின் rommen@annai.no மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். அவ்வாறு அனுப்பப்படும் விடயங்கள் யாப்புவிதிகளுக்கு ஏற்ப பரிசீலனை செய்யப்பட்டு ஆண்டுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் இணைக்கப்படும்.

**தெரிவுக்குழு 2025**

புதிய நிருவாக அங்கத்தவர்களை நிருவாகத்திற்கு உள்வாங்கவுள்ளோம். நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற விருப்புபவர்கள் கீழேயுள்ள விண்ணப்பப்படிவத்தை 20.09.2025ம் திகதிக்கிடையில் நிரப்பி அனுப்பவும்.

https://forms.office.com/Pages/ResponsePage.aspx?id=fGrPxCG_x0GSpcQdWdZrrl_nKNWm5uZMqR5fL7l8RexURENVVlUwVzY1QURHTDBKQ01JNUZKVzYxUS4u

***தெரிவுக்குழு: தொடர்புகளுக்கு*** **valgkomite.rommen@annai.no**

**நிர்வாகத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய தகைமை!**

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் யாப்பு விதிகளுக்கும், நடைமுறைவிதிகளுக்கும் நோர்வே நாட்டு சட்டவிதிகளுக்கும் கட்டுப்பட்டு, கல்வி, கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்குப் போதியளவு நேரம்விடக்கூடியவர்களாக இருத்தல் அவசியம். முக்கியமாக உறுப்பினர் உரிமையை முழுமையாகப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது ஐயப்பாடுகள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

தொலைபேசி இல. 90104881 நன்றி!

நிர்வாகம் - றொம்மன் வளாகம்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.